Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 24 திங்கட்கிழமை (09-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 13

# தேர்தலில் கலந்துகொள்வது குறித்து ஐந்து தமிழ்க் கட்சிகள் இன்று முடிவு!

## சந்திரிகாவை சந்தித்து பேசிய பின் தீர்மானம்

கொழும்பு, டிசம்பர் 9

வடக்கில் நடத்த உத்தேசித்துள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு ஐந்து தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தை ஏகோபித்த குரலில் வலியுறுத்தியுள்ள போதிலும் --

அத்தேர்தலை திட்டமிட்டபடி அரசு நடத்தினால் அதில் போட்டியிடுவதா என்பது குறித்து அக்கட்சிகளுக்கு இடையில் முரண்பாடு நிலவுவதாகத் தெரியவருகின்றது.

ஐந்து கட்சிக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இன்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர் என்றும் - அதன்பின்னரே அக்கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமது முடிவை மேற்கொள்வர் என்றும் தெரியவருகின்றது.

இத்தேர்தல்களை முற்றும் முழுதாகப் பகிஷ்கரிக்கப் போவதாக தமிழர் விடுதலைக்கூட்டணியும், ஈரோஸும் ஏற்கனவே அறிவித்துவிட்டன.

எனினும் இந்த விடயம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை நோக்கி படைநடவடிக்கை?

### முன்னேற்பாடு நடக்கிறதாம்

கொழும்பு, டிச. 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரைப் பிரதேசத்தை நோக்கி இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள படையினர் ஆயத்தங்கள் செய்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாழைச்சேனை காகித ஆலை முகாமில் கூடுதலான படைகள் குவிக்கப்பட்டு வருவது இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கான

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 5 படையினர் பலி!

கொழும்பு, டிச. 9

கடந்த வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கிளிநொச்சியின் தெற்குப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத்தினர் திருப்பித் தாக்கியதில் புலிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## ஜீ. சீ. ஈ. (சா. த.) பரீட்சை

## வினாத்தாள்கள் யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், டிச. 9

எதிர்வரும் 11 ஆம் திகதி (புதன்கிழமை) ஆரம்பமாக இருக்கும் ஜீ. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சைக்கான முதல் ஐந்து நாள்களுக்குரிய வினாத்தாள்கள் நேற்று முன்தினம் விமான மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான சகல வேலைகளும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



உது... சொகுசு ரத்தம்... .. போராடுறவையளுக்குப் பொருந்தாது எண்டு டாக்குத்தர்மாருக்கு விளங்கிப் போட்டுது போலை ... !

## காலியில் பாதயாத்திரை

கொழும்பு, டிச. 9

காலியில் இன்று சமாதான பாதயாத்திரை ஒன்று நடைபெறவிருக்கிறது.

இனங்களுக்கிடையே சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் வலியுறுத்தி இந்த பாதயாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## இன்று பயணிகள் கப்பல் சேவை

இன்று காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கான பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என பலாலி வானொலி அறிவித்தது.

யாழ்ப்பாணம் சிவில் விவகார அலுவலகத்தில் திருகோணமலை செல்வதற்காகப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 140இற்கு உட்பட்டோரை இன்று காலை 7 மணிக்குச் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்துக்குச் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-5)

## இரத்ததானம் வழங்க 140 எம். பிக்களில் 4 பேர் மட்டுமே தகுதி!

கொழும்பு, டிச. 9

வடக்கு - கிழக்குப் போரில் காயமடையும் படையினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் இரத்தம் வழங்குவதற்கு 140 எம். பிக்கள் முன்வந்தனராயினும் அவர்களில் நான்கு பேர் மட்டுமே இரத்த தானம் செய்யத் தகுதி உடையவர்கள் என்று கண்டறியப்பட்டதால் அந்த முயற்சி பெரும் தோல்வியில் முடிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்த தானம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அ.தி.மு.க. தொண்டர் தீக்குளித்துச் சாவு!

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழ் நாட்டில் ஆங்காங்கே சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

மதுரை, சேலம் பகுதிகளில் 7 பஸ்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. 76 பஸ்கள் கல் வீச்சுக்கு இலக்காகிச் சேதமாகின.

சுமார் 20 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அ. தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் இது குறித்து பொலீஸார் விவரம் எதையும் வெளியிடவில்லை.

ஜெயலலிதா கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்று முன்தினம் 33 வயதான அ. தி. மு. க. தொண்டர் ஒருவர் தீக்குளித்தார். அவர் நேற்று மரணமடைந்தார்.

அரசு தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததால் பெரிய அளவில் அசம்பாவிதங்கவ இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஜெயலலிதா வீட்டில் அதிகாரிகள் சல்லடை!

ஜெயலலிதாவின் சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள வீட்டிலும், ஹைதராபாத்தில் உள்ள பண்ணை இல்லத்திலும் நேற்று ஒரே சமயத்தில் பெரும் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. இத்தேடுதலில் மிக முக்கியமான ஆவணங்கள் பல சிக்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய புலனாய்வுத் துறையினர், லஞ்ச — ஊழல் ஒழிப்புப் பிரிவினர், தமிழக புலனாய்வு அதிகாரிகள் என பெரிய கூட்டம் ஒன்று ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்தை சல்லடை போட்டுத் தேடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## விடுதலைப் புலிகளின் தளம் அமெரிக்காவில் உள்ளதா?

### அந்நாட்டு புலனாய்வுப் பிரிவு விசாரணை

கொழும்பு, டிச. 9

ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துக்களை இலங்கைக்குக் கடத்துவதற்கு அமெரிக்காவை விடுதலைப் புலிகள் தளமாகப் பாவிக்கிறார்களா என்பது குறித்து அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப்பணியகம் (S.B.I.) விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் —

இது விடயமாக ஆதாரங்கள் கிடைத்தால் அமெரிக்கா முழுவதும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு ஐ. நா. சபையை வற்புறுத்துவோம் என்றும் —

அமெரிக்க உயர் இராஜதந்திர அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ''சண்டே லீடர்'' நேற்று தலைப்புச் செய்தி வெளியிட்டது.

விடுதலைப் புலிகளின் தளம் அமெரிக்காவில் உள்ளதாக இலங்கை அரசு கூறி வருவது தொடர்பாக இலங்கை அரசிடம் ஆதாரங்கள் ஏதும் இருக்கிறதா என்று அமெரிக்கா கோரியதாகவும் —

ஆனால் அத்தகைய தகவல்களைத் தர வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் தவறி விட்டது என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

வேறு விரிவான தகவல்களைத் தராமல் அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிக்கிறார்கள் என்று மட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கொமாண்டோ அணி இலங்கைக் கடற்படைக்குப் பயிற்சி!

அமெரிக்க கடற்படையின் கொமாண்டோக்கள் (Seals) கொண்ட குழு ஒன்று இலங்கை வந்து இலங்கைக் கடற்படைக்கு பயிற்சி அளித்துள்ளது.

தங்காலைக்கு அருகில் உள்ள கடலில் இந்தக் கொமாண்டோக்கள் இலங்கை கடற்படைக்கு இரு வாரம் பயிற்சி அளித்துத் திரும்பினர்.

இந்த கூட்டுக் கடற்படை பயிற்சி இலங்கைக் கடற்படையினருக்கு பெரும் பயன் அளிக்கக் கூடியதாக இருந்தது என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் கடற்படை வீரர் ஒருவர் சுழியில் மூழ்கி மரணமானார்.

ஆனால் அவர் இலங்கையரா? அல்லது அமெரிக்கரா என்பது குறித்து விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

(உ-3-150)

# ஈழத் தமிழருக்கு விஸா வழங்குவதில் எச்சரிக்கையாக இருக்க பணிப்பு!

## இந்தியத் தூதரகத்துக்கு புதுடில்லி உத்தரவு

கொழும்பு, டிச. 9

இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவுக்குள் பிரவேசிப்பதற்கான விஸா வழங்கும் போது மிக எச்சரிக்கையாக இருக்குமாறு கொழும்பில் உள்ள இந்திய தூதரை புதுடில்லி அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

தமிழர்களுக்கு விஸா வழங்குவதில் கூடிய கவனம் செலுத்துமாறும் —

விஸாவுக்கு விண்ணப்பிக்கும் யாரேனும் நபர் குறித்து சந்தேகம் ஏதும் ஏற்பட்டால் புதுடில்லியில் இயங்கும் பாதுகாப்புத் துறையின் கியூ பிரிவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அது பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கும்படியும் —

அவர்களின் அனுமதி பெற்று அத்தகைய நபருக்கு விஸா வழங்கும்படியும் —

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் பணிக்கப்பட்டிருக்கின்றாராம்.

(உ-3-150)

பொ.ஐ. முன்னணியின் பொதுவேட்பாளர் பட்டியல்:

# ஸ்ரீமானியின் கட்சி சம்மதிக்காவிடில் ஏனையகட்சிகள்இணைந்துபோட்டி

கொழும்பு, டிச. 9

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உள்ளூராட்சித் சபைத் தேர்தல்களில் ஸ்ரீமானி அத்துலத் முதலிதலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொது வேட்பாளர் பட்டியலில் இணைந்துபோட்டியிட மறுத்தால், அக்கட்சியைத்தவிர்த்துவிட்டு ஏனைய கட்சிகள் இணைந்து போட்டியிடுவது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் ஆனந்த தஸநாயக்க தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடந்தது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட ரவி கருணாநாயக்கா, பொதுப் பட்டியலில் தமது கட்சி போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து எதிர்வரும் 19ஆம்திகதிகூடும் கட்சியின் செயற்குழு முடிவு செய்யும் என்றார்.

(இ-3)

# மன்னாரிலிருந்து கொழும்பு வருவோரின் அவல நிலை

## கூட்டணித் தலைவர் பாதுகாப்பு அமைச்சிடம் முறையீடு

மன்னாரில் இருந்து கொழும்பு வருவோரின் அவல நிலை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுடன்தொலைபேசியில் தொடர்பு கொண்ட சிவசிதம்பரம், கற்பிட்டியில் மக்கள் படும் அவலங்கள் குறித்துத் தெரிவித்தார்.

மன்னாரில் இருந்து கொழும்புக்கு செல்பவர்கள் 3 கட்டங்களில் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அப்படியிருந்தும் கற்பிட்டியிலும் தேவையற்ற விதத்தில் தடுத்து வைக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

எந்தவிதமான வசதியும் அற்ற அந்த இடத்தில் அவர்கள் வாரக் கணக்கில் தங்கியிருக்கிறார்கள். இது வேதனைக்குரியது—என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

மக்கள் மனதில் தமக்கென ஓர் அழியாத இடம் பிடித்த

"வீடியோ கலாமினி"

தமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன்

சிங்கப்பூரிலிருந்து புதிய ரக மிக்சர்கள், புத்தம் புதிய கமராக்கள் வரவழைத்து திறம்பட தமது சேவையை நடத்தி வருகின்றார்கள்.

அத்துடன் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த

சொக்கட்டான் மணப்பந்தல் சேவையையும்

நடத்துகின்றனர்.

மேற்படி தேவைகளுக்கு நாடுங்கள்:

★★ வீடியோ கலாமினி ★★

— அச்சுவேலி —

குறிப்பு: முன்பு போல சாவகச்சேரி - பளை - மணற்காடு - செம்பியன்பற்று - மானிப்பாய் - சங்கானை - தீவுப்பகுதி என சகல பகுதிகளுக்கும் எமது சேவை வழமை போல் நடைபெறுகின்றது. அச்சுவேலிக்கு முன்பு போல தடையின்றி வந்து போக வசதியுண்டு. வர வசதி இல்லாதோர் கடிதமூலம் எம்முடன் தொடர்பு கொண்டால் நாமே வருகை தந்து எமது சேவையை மிகத் திறம்பட நடத்தித் தருவோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(43996)

வடக்கு - கிழக்கில்

# ஆங்கில ஆசிரியர் 230 பேர் நியமனம்

கொழும்பு, டிச. 9

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் ஆங்கில மொழி ஆசிரியர்கள் 230 பேர் நியமனம் பெறுகிறார்கள்.

மாவட்டங்களில் இயங்கும் ''டெலிக்'' பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களில் இருந்தே இவர்கள் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 59பேர் சிங்களப் பாடசாலைகளுக்கும், ஏனையோர் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் நியமனம் செய்யப்படுவர்.

இவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளமாக வழங்கப்படும் என்றும் —

4 வருடங்கள் தகுதிகாண் காலத்தின் பின் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-130)

தேவை

தையலில் நல்ல அனுபவம் உள்ள பெண்கள் தேவை.

தொடர்பு:

நாதன் றேடேர்ஸ்,
இல. 636,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(44027)

# ஜனாதிபதியை சந்திக்காத அமெ. அதிகாரி

கொழும்பு, டிச. 9

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் ஆசிய — பசுபிக் கட்டளைப்பீடத் தளபதி வில்லியம் ஸ்ரீல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்காமல் திரும்பியதாககொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை மட்டும் அவர் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியை அவர் சந்திக்காமல் திரும்பியது முக்கிய விடயம் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-3-150)

பாரதி
சித்தன்கேணி.

புதிய வகுப்புகள்
ஆண்டு 6 முதல் 11 வரை

ஆரம்பம்:
11-12-96 புதன்
காலை 9-00 மணி

விஞ்ஞானம்:
திரு. தேவா
கணிதம்:
திரு. நடா, திரு. சிவறூபன்
தமிழ்:
திரு. சின்னத்தம்பி
திரு. றஞ்சன்
ஆங்கிலம்:
திரு. தெய்வதவபாலன்
திரு. அருமைநாயகம்
சமூகக்கல்வி:
திரு. ஆர்த்திகன், திரு. சிவா
வர்த்தகம்:
திரு. அற்புதராஜா

அனுமதிகளை முன்கூட்டி பெற்றுக்கொள்ளவும்.

(44028)

அஸ்ரன்
4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 97
ஆண்டு 4-O/L வரை
ஆரம்பம்: 10-12-1996
செவ்வாய்
பிற்பகல் 3-00 மணி

அனுமதிகள்
வரையறுக்கப்பட்டவை

கணிதம்
P. வினோத்குமார்

(44030)

# மரண அறிவித்தல்

## பண்டிதர் சதாசிவம் பொன்னுத்துரை

முன்னாள் வட இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க தலைவரும், இளைப்பாறிய கைதடி விக்கினேஸ்வரா அதிபரும், யாழ்ப்பாணம் ஆரிய பாஷா அபிவிருத்திச் சங்க உப தலைவரும், ஏழாலை தெற்கை பிறப்பிடமாகவும்; மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டவருமான மூதறிஞர் பண்டிதர் சதாசிவம் பொன்னுத்துரை அவர்கள் 8-12-96 ஞாயிறு அன்று இறைபதம் அடைந்தார்.

அவர் காலஞ் சென்ற ஆசிரியை சரசாம்பிகையின் அன்புக் கணவரும், ஸ்ரீவாமதேவன் (இசை ஆசிரியர், கைதடி நுணாவில் அ. த. கபாடசாலை), குகதாஸ் (பொறியியலாளர், இங்கிலாந்து) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சாரதா தேவி, வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும், வாமினி, அனுசியா, அகல்யா ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற செல்லத்துரை, திருமதி அன்னமுத்து நாகேந்திரன், அப்பாத்துரை ஆகியோரின் சகோதரனும், தர்மலிங்கம் (இளைப்பாறிய விஞ்ஞான ஆய்வாளர், கொழும்பு), காலஞ்சென்ற கனகாம்பிகை (ஆசிரியை), காலஞ்சென்ற அருணாசலம் (அதிபர்), தில்லைநாதர் (இளைப்பாறிய R. M. P) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்,

இவரது இறுதிக் கிரியைகள் இன்று (09-12-96) திங்கட்கிழமை பி. ப. 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடையெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன். ஸ்ரீவாமதேவன்
[மகன்]

மட்டுவில் தெற்கு,
மட்டுவில்.

(44026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தாக்குதல் கிழக்கில் அதிகரிப்பு!

## அரசியல்-ராணுவ வலைவிரிப்பு

கொழும்பு, டிசம்பர் 9

★ கிழக்கு மாகாண நிலைவரங்கள் மேலும் சிக்கலாகும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

★ 'மூன்றாம் கட்ட ஈழப்போர்' என்று புலிகள் இயக்கத்தினரால் அழைக்கப்படும் இக்காலகட்டத்தில் கடற்தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் என்பவை கிழக்கிலும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

★ அரசியற்துறை, இராணுவத்துறை என்னும் இரு வழிகளிலும் கிழக்கில் புலிகள் இயக்க நடவடிக்கைகள் முன்னைய காலங்களைவிட தற்போது துரிதமடைந்துள்ளன.

— இவ்வாறு கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது. அப்பத்திரிகை மேலும் தெரிவித்ததாவது;-

தமது அரசியல் ரீதியான அணுகு முறைகளையும் கிழக்கில் புலிகள் மாற்றிக்கொண்டுள்ளனர். முஸ்லிம் மக்களை பகைத்துக் கொள்ளாமல் செயற்படும் அணுகு முறைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தனிமைப்படுத்தும் விதமாக அப்பகுதிகளுக்கு பொருளாதாரத்தடைகள் விதிக்கப்பட்டன; மின்சாரம், தொலைபேசி வசதிகள் போன்றவையும் இல்லாமல் வைக்கப்பட்டன.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைவிட அடிப்படை வசதிகளில் உயர்வாக இருப்பதாகக் காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம்.

அதன்மூலம் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்கள் புலிகளின்மீது வெறுப்புக் கொள்வார்கள்; தமது பகுதிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தால் வசதிகள் கிடைக்கும் என்று நினைப்பார்கள் என படைத்தரப்பினர் நினைத்தனர்.

ஆனால் புலிகள் பதிலடித் தந்திரமாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் மின்சாரம், தொலைபேசி வசதிகள் இல்லாமல் செய்ய ஆரம்பித்தனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கியது. இறுதியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சிலவற்றுக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலை அப்புறப்படுத்த சென்ற பாரம் தூக்கி ரயிலும் விபத்தில்

திருகோணமலையில் கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்கான ரயிலை அப்புறப்படுத்த கொழும்பில் இருந்து சென்ற பாரந் தூக்கி ரயில் ஒன்று கலாவெவவுக்கும், கெக்கிராவவுக்கும் இடையில் விபத்துக்குள்ளாகி தடம்புரண்டது.

கடந்த வியாழக்கிழமை நடந்த இந்த விபத்தையடுத்து கொழும்பு-திருமலை ரயில் சேவை காலவரையின்றி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் கொள்ளை முயற்சி

கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் நங்கூரமிட்டிருந்த கப்பல் ஒன்றில் கொள்ளையடிக்க மேற்கொண்ட முயற்சி படையினரால் முறியடிக்கப்பட்டது.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொள்ளையரின் படகு ஒன்று சேதமடைந்து நீரில் மூழ்கியது.

மற்றைய படகில் இருந்த பலர் காயங்களுடன் கைதாகினர்.

இச்சம்பவம் குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில்;-

கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் கல் பொக்க பகுதியில் நங்கூரமிடப்பட்டிருந்த எம். வி. எம். சிங்கப்பூர் என்ற கப்பலில் பாதுகாப்பு கடைமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் செவ்வாயன்று இரவு 11.00 மணி அளவில் இரு கண்ணாடி இழைகளிலான படகுகளின் நடமாட்டத்தை அவதானித்தனர் என்றும் —

கண்ணாடி இழைப்படகு ஒன்று கப்பலுக்கு மிகவும் சமீபமாக வந்தவுடன் அதிலிருந்து ஆயுதங்களுடன் கொள்ளைக்காரர் மேற்படி கப்பலுக்குள் கயிற்றின் உதவியுடன் ஏற முயற்சித்தனர் என்றும் —

அதைத் தொடர்ந்து குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

## முல்லையின் சில பகுதிகளில் கிபிர் விமானம் குண்டு வீச்சு

வவுனியா, டிச. 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திரபுரம், உடையார்கட்டுப் பகுதிகளில் இடம்பெற்ற கிபிர் விமானக் குண்டுவீச்சில் மூவர் காயமடைந்தனர்.

திருமதி பாப்பம்மா (56 வயது), அ. முருகேசு (42 வயது), மு. சிவராசா (21 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

ஒரு வீடு முற்றாக சேதமடைந்தது. பல வீடுகள் சிறு சேதங்களுக்கு உள்ளாகின.

இதேவேளை — அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம் பகுதிகளிலும் குண்டு வீச்சு இடம்பெற்றது. (இ-3)

## யாழ்.மாவட்ட வீதிகள் திருத்தப்படும்

கொழும்பு,டிச.9

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 வீதிகள் உடன் திருத்தப்பட இருக்கின்றன.

இந்த திருத்த வேலைகளுக்காக ஆயிரம் பரல் தார் அவசரமாக கப்பல் மூலம் எடுத்து வரப்படஇருக்கிறது. (இ-3-150)

# ஜெயலலிதா கைதானதுக்கு பல கட்சிகள் வரவேற்பு

சென்னை, டிச. 9

தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா லஞ்சக்குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டதை தமிழகத்தில் உள்ள பல அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளன.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் குமரி அனந்தன் இந்தக் கைது நடவடிக்கையை வரவேற்றுள்ளார். அதேசமயம் தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க. அரசு பழி வாங்கும் போக்கில் நடக்கக் கூடாது என்று அவர் கேட்டுக் கொண்டார்.

செல்வி ஜெயலலிதா கைது செய்யப்பட்டுள்ளது நியாயமானது என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்காக நடவடிக்கை எடுக்கும் போது பாரபட்சமின்றி சட்டப்படி அரசு நடந்து கொள்ளவேண்டும் என்றும்—

முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும்— அக்கட்சியின் மாநில செயலாளர் சங்கரய்யா தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதா கைது செய்யப்பட்டது நியாயமான நடவடிக்கை என்றும்—

சட்டம் அதன் கடமையை செய்ய முற்பட்டிருப்பது நியாயமானது என்றும்—

தவறு செய்தவர்கள் தப்ப முடியாது என்றும்— அம்பேக்கார் மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது. (இ-3)

## வழமையான கடமைகளை நிறைவேற்ற இயலாத திரேஸா

### உடல்நிலை இனி இடம்கொடாதாம்

கல்கத்தா, டிச. 9

சுகவீனம் காரணமாக தற்போது கல்கத்தா வூட்லன்ட்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அன்னை திரேஸா மேலும் சில தினங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும் என சிகிச்சை அளித்துவரும் மருத்துவர்கள் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு அன்னை திரேஸாவுக்கு மூன்று முக்கிய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் —

அவரால் இனிமேல் நாளாந்த பணிகளை மேற்கொள்ளக்கூடிய உடல் நிலையைப் பெறுவது சந்தேகமே எனவும் மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர். (இ-10)

## தொழிற்சாலை கூரை மீது விமானம் விழுந்து நொருங்கியது

### இந்தோனேஷியாவில் சம்பவம்

ஜகார்த்தா, டிச. 9

இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் விமான விபத்து ஒன்றில் 16 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு கலிமண்டார் மாநிலத்தில் பஞ்சர் மாசின் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்த விமானம் விழுந்து நொருங்கியது.

அதன் இயந்திரங்களில் ஒன்று தீப்பிடித்துக் கொண்டதையடுத்து 'காஸ்' தொழிற்சாலை கூரை ஒன்றின் மீது விமானம் வீழ்ந்தது.

இச்சம்பவத்தில் தொழிற்சாலை ஊழியர் ஒருவரும் உயிரிழந்தார். வேறு மூன்று பேர் படுகாயமடைத்தனர்.

இரு பயணிகள் மட்டும் உயிர் தப்பினார்கள். (இ-3)

## ஹூட்டு அகதிகளின் சடலங்கள் கோமா முகாமில் கண்டுபிடிப்பு

ஸயர், டிச. 9

ஸயர் நாட்டின் வடக்கு கோமா நகரில் உள்ள அகதி முகாமில் றுவாண்டா ஹூட்டு இன அகதிகளின் 20 அழுகிய உடல்களை பத்திரிகையாளர்கள் நேற்று முன்தினம் பார்த்தனர்.

ஸயர் கிளர்ச்சிக்காரர்கள் இந்தக் கொலைக்கு காரணம் என்று மற்ற அகதிகள் தெரிவித்தனர்.

ஆனால் சிவிலியன்களை தாங்கள் கொல்லவில்லை என்று கிளர்ச்சிக்காரர்கள் தெரிவிக்கிறார்கள். (இ-3)

# கணவர் கொல்லப்படலாம் என்று பெனாஸிர் அச்சம் தெரிவிப்பு

கராச்சி, டிச. 9

பதவி நீக்கம் செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தமது கணவர் கொலை செய்யப்படலாம் என்று அச்சம் தெரிவித்தார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமது கணவர் அசிவ் அலி சர்தாரியை சிறைச்சாலையில் சந்தித்து ஒரு மணித்தியாலம் பேசிய பின்னரே அவர் இத்தகவலை தெரிவித்தார்.

தமது கணவருக்கு சயனைட் நஞ்சு கொடுக்கப்படலாம் என்றும் அவர் கூறினார்.

தான் கிளியை வளர்க்கும் கூட்டைவிட மோசமான அறையிலேயே தமது கணவர் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பெனாஸிர் பூட்டோ தெரிவித்தார். (இ-3)

## உலக அரங்கில்

## உகண்டாவில் மீண்டும் கலகம்

கம்பாலா டிச. 9

உகண்டா நாட்டுப் படைகளுக்கும் கலகப் படைகளுக்குமிடையே மீண்டும் பலத்த மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ருவண்ஷாரி மலைப்பகுதியில் இடம் பெற்ற இந்தச் சண்டைகளினால் பீதியடைந்து மலைக்கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர். (உ-10)

## பாகிஸ்தானுக்கு கண்காணிப்பு விமானங்கள்

அமெரிக்காவிடம் இருந்து மூன்று நவீன நெடுந்தூர கடற் படை கண்காணிப்பு விமானங்களை பாகிஸ்தான் வாங்கியுள்ளது.

சென்ற வெள்ளிக்கிழமை இந்த விமானங்கள் பாகிஸ்தான் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (இ-3)

## பொஸ்னியா பற்றிய சர்வதேச மாநாடு

லண்டன், டிச. 6

பொஸ்னியா விவகாரம் தொடர்பான சர்வதேச மாநாடு லண்டனில் நடைபெற்றது. 56 நாடுகள் அதில் பங்கேற்றன.

நிரூபிக்கப்பட்ட போர் கிரிமினல் குற்றவாளிகள் கைது செய்யப்படாமல் பொஸ்னியாவில் சுதந்திரமாகச் சுற்றித் திரிவதை மாநாடு கண்டித்து அவர்களை உடனடியாகக் கைது செய்து தண்டனை அளிக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஆதிக்கப் பிரதேசத்தில் நடந்து வந்த அனுபவம் கிடைத்தது

## செய்தியாளரிடம் அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு

கொழும்பு, டிச. 9

புலிகளின் ஆதிக்கப் பகுதி ஊடாக நடந்து வந்தது எனக்கு ஒரு நல்ல அனுபவம் ஆகும்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியாவில் இயந்திரக் கோளாறு காரணமாக புலிகளின் ஆதிக்கப் பகுதியில் தரை இறக்கப்பட்ட ஹெலிக்கொப்டரில் ஏனைய உயர் இராணுவ அதிகாரிகளுடன் பயணம் செய்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தமக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

என்னுடன் இராணுவத் தளபதி, பொலீஸ் மா அதிபர், உயர் அதிகாரிகள் மற்றும் அந்தக் ஹெலியின் விமான ஓட்டிகள் ஆகியோர் இருந்தனர்.

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வருவதே அந்நேரத்தில் எமக்குப் பொருத்தமான செயலாகத் தோன்றியது.

எனவே உடனடியாகச் செயற்பட்டோம். 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வவுனியாவை நோக்கி நடக்க ஆரம்பித்தோம்.

பொதுமக்களின் உதவியுடன் சுமார் 4, 5 மணித்தியாலங்களாகக் காட்டின் ஊடாக வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்தோம்.

அப்போது விமானப் படையைச் சேர்ந்த ஹெலி ஒன்று எம்மை ஏற்றி வவுனியாவுக்கு கொண்டு வந்து சேர்த்தது.

நண்பகல் 12 மணியளவில் வவுனியா வந்துசேர்ந்தோம். வவுனியா வந்து மதிய போசனத்தை முடித்த பின்னர் திட்டமிட்டபடி எமது பயணத்தை முடித்த பின்னரே கொழும்பு திரும்பினோம்.

இந்தச் சம்பவத்தினால் காட்டில் பயணம் செய்யும் அனுபவம் கிடைத்தது. விடுதலைப் புலிகள் உள்ள பிரதேசத்தினூடாக நடந்து வந்த அனுபவமும் கிடைத்தது.

இப்படி அனுருத்த ரத்வத்த மேலும் கூறினார். (இ-3-10)

# தரை இறங்கிய ஹெலி படையினரால் அழிப்பு

கொழும்பு, டிச. 9

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் மற்றும் இராணுவ அதிகாரிகளும் பயணம் செய்த ஹெலிக் கொப்டர் வவுனியாக்காட்டில் வைத்தே படையினரால் அழிக்கப்பட்டு விட்டது.

இயந்திரக் கோளாறு காரணமாக கைவிடப்பட்ட இந்த ஹெலி புலிகளின் கையில் சிக்கி விடலாம் என்று அஞ்சப்பட்டதாலேயே அது அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹெலியில் பயணம் செய்தவர்கள் ஹெலியைக் கைவிட்டுச் சென்ற சமயம் அழித்துவிட்டுச் சென்றனரா?

அல்லது அவர்கள் சென்ற பின்னர் தகவல் அறிந்து விமானப் படையினர் குண்டு வீசி அழித்தனரா? என்பது தெரியவரவில்லை. (இ-3)

# தப்பியோடிய படைச் சிப்பாய்களில் 20 ஆயிரம் பேர் திரும்பி விட்டனராம்!

## அமைச்சர் ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, டிச. 9

''இராணுவத்தில் இருந்து தப்பியோடியோரில் இதுவரை 20 ஆயிரத்து 158 பேர் சேவைக்கு திரும்பியுள்ளனர்'' என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

யுத்தம் உண்மையாகவும், நேர்மையாகவும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

இராணுவத்தை விட்டு கடந்த ஆட்சியின் போது ஆயிரக்கணக்கானவர்கள் தப்பிச் சென்றனர். அவர்களில் 20 ஆயிரம் பேர் வரை இப்போது திரும்பி வந்து விட்டனர். இவர்களுக்கு திரும்பி வருவதற்கான காலக்கெடுவை நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம்.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2,850 பேரும், ஜூலை மாதத்தில் 4,806 பேரும், நவம்பர் மாதத்தில் 11 ஆயிரத்து 196 பேருமாக இதுவரை 20 ஆயிரத்து 158 பேர் இராணுவத்துக்கு திரும்பிவிட்டனர்.

இராணுவச் சட்டப்படி 1836 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றதற்கு காரணம் முன்னைய அரசாங்கத்தின் கெடுபிடிகளும், வசதியற்ற வாழ்க்கை முறையுமேயாகும் என்றார். (உ-3)

# திக்கம் பனம் சாராயத்தின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

கொழும்பு, டிச. 9

திக்கம் சாரய வடிசாலையில் உற்பத்தியாகும் சாராயத்தின் தரத்தை உயர்த்த கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

கள்ளில் இருந்து சாராயம் உற்பத்தி செய்யும் திக்கம் வடிசாலையில் நவீன வசதிகளைச் செய்ய கைத்தொழில் அபிவிருத்திச்சபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்த வடிசாலைக்கு காலால் லைசென்ஸ் வழங்க யாழ். அரச அதிபருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அதேவேளை — யாழ்ப்பாணத்தில் சாராய விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு சி. டபிள்யூ. ஈ. நிறுவனத்தை அரசாங்கம் கோரியுள்ளது. (இ-3-150)

# சிறுவர் நிதியம், கெயர் அலுவலகங்கள் மீண்டும் நகரில்!

யாழ்ப்பாணம், டிச. 9

சர்வதேச தொண்டர் நிறுவனங்களான கெயர், ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன யாழ். நகரில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையையடுத்து யாழ் நகரில் இருந்து பருத்தித்துறைக்கு இந்த நிறுவனங்கள் இடம் பெயர்ந்திருந்தன.

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதையடுத்து இவை மீண்டும் யாழ். நகரில் செயற்பட ஆரம்பித்துள்ளன.

## சிறைச்சாலை விரைவில் இயங்கும்

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை இயங்க வசதியாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் ஒன்றாக யாழ். சிறைச்சாலையும் அமையும் என அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரைவில் இந்தச்சிறைச்சாலை இயங்கும் (இ-3-153)

# காலம் பிந்தினால் இனப்பிரச்சினை தீர்க்க முடியாத ஒன்றாகி விடும்

## ஈ. பி. டி. பி. உறுப்பினர் தெரிவிப்பு

''வடக்கு — கிழக்கில் நாளுக்கு நாள் கிருஷாந்திகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே உடனடியாக வடக்கு—கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும். காலம் செல்லச் செல்ல இது தீர்க்க முடியாத பிரச்சினையாக மாறிவிடும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ஆர். இராமமூர்த்தி காரைதீவு விளையாட்டுக் கழகம் நடத்திய தீபாவளி விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

''நாம் தீபாவளி நிகழ்ச்சிகளை நடத்தி களிப்புற்றுக் கொண்டிருக்கிறோம். வடக்கிலோ ஒரு சாரார் இன்னும் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நீதிக்கு விலை பேசப்படுகின்ற காலகட்டம் இது. கிருஷாந்தி விவகாரம் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று.

தமிழ் — முஸ்லிம் ஒற்றுமையின்றி இப்பகுதியில் அபிவிருத்தியைக் காண முடியாது. வடக்கு — கிழக்கில் அதிகாரமுள்ள அரசியல் அமைப்பொன்று அவசியம் தேவை என்றும் அவர் கூறினார். (இ-150)

# ரத்வத்த போட்டியிட முன் வந்தால் அவரை எதிர்த்து போட்டியிடுவேன்

## ஐ. தே. கட்சி எம். பி. சவால்

கொழும்பு, டிச. 9

''வடக்கே நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த போட்டியிட முன் வருவாரேயானால், அவரை எதிர்த்துப் போட்டியிட நான் தயாராக இருக்கிறேன்.''

வன்னி மாவட்ட ஐ.தே.க. எம். பியான இராஜமனோகரி புலேந்திரன் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கே தேர்தல் நடத்தலாம் என அமைச்சர் அனுருத்த மணி அடிக்க, படையினர் சலங்கை கட்டி நர்த்தனம் ஆட, அரசாங்கம் சங்கை ஊதி முழக்கம் செய்துள்ளது.

ஆனால் யாழ். மாவட்டத்தில் இருந்து 2 இலட்சத்துக்கும் மேலான மக்கள் வெளி மாவட்டங்களிலும், வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் அகதிகளாக உள்ளனர்.

அடிப்படை வசதிகள் இன்றி அகதிமுகாம்களில் மக்கள் அவலப்படுகிறார்கள்.

இந்நிலையில் வெளிநாடுகளுக்கு காட்ட தேர்தல் நடத்த ஏற்பாடா?

இப்படி அவர் மேலும் பேசினார். (இ-3)

## ஓய்வூதியக் கொடுப்பனவு இல்லை

உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர்களுக்கான நவம்பர்மாத ஓய்வூதியக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை.

கடந்த மூன்று வருடங்களாக உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு நவம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் நான்கு மாதங்களின் பின்னர் பெப்ரவரி மாதங்களி

(7 ஆம் பக்கம் பார்க்க)

# அரச ஆட்சேர்ப்புப் பரீட்சைகளை எழுத முடியாத வடக்கு இளைஞர்!

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் இரண்டாம் பாகம், இலங்கைக் கணக்காளர் சேவையின் வகுப்பு II தரம் II, வரி மதிப்பீட்டாளர் ஆகிய போட்டிப் பரீட்சைகள் அண்மையில் அடுத்தடுத்துக் கொழும்பில் நடைபெற்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு, நாட்டின் ஏனைய பகுதிகளுடனான தரைவழிப் போக்குவரத்துப் பாதை துண்டிக்கப் பட்டமையினால் அங்குள்ள பரீட்சார்த்திகளில் பெரும்பான்மையானோர் மேற்கூறிய பரீட்சைகளுக்குத் தோற்ற முடியவில்லை. தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் நாளொரு வண்ணம் இடம்பெறும் கெடுபிடிகளால் வன்னிப் பெரு நிலப்பரப்புப் பரீட்சார்த்திகளுக்கும் இதேநிலை தான்.

இப் பரீட்சைகளுக்கெனத் தம்மை அவர்கள் பலகாலமாக ஆயத்தப்படுத்தியும் கொழும்புக்கு வரும் போக்குவரத்து வசதி மறுக்கப்பட்டு பரீட்சைக்குத் தோற்ற முடியாது போன நிலை மிகவும் மனவேதனைக்குரியது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, தரவு நிரற்படுத்தல் கிளை அதிகாரிகள் கொழும்பில் இயங்கும் வடபகுதி அரசாங்க அதிபர்களின் இணைப்பு அலுவலங்கள் ஊடாகவோ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகவோ பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பிவைத்திருந்தால் அப் பரீட்சார்த்திகள் கொழும்பு வந்திருக்க முடிந்திருக்கும். பரீட்சைத் திகதியிலிருந்து 20 நாள்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகளை அனுப்பி வைத்தால் தான் அதுவும் சாத்தியப்படும்.

### பயணத்துக்கு அனுமதி தேவை

யாழ்ப்பாண நிலைமை இன்று தனியான நிலை. பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றால் மட்டுமே அவர்கள் பயணிக்க முடியும். யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத் தெருவில் இயங்கும் சிவில் விவகார காரியாலய இணைப்பாளர் கொழும்பு பயண அனுமதிக்கு பரீட்சை அனுமதி அட்டையைப் பார்வையிட சமர்ப்பிக்குமாறு கேட்கின்றார். ஆனால் பரீட்சார்த்திகளால் பரீட்சைத் திணைக்களம் அனுப்பிவைக்கின்ற அறிவுறுத்தல் கடிதத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடிகின்றது. ஆனால் இக் கடிதத்தை ஏற்றுக் கொள்வது மிகக்குறைவு. ஆவண ரீதியாக பரீட்சார்த்திகள் தம்மை நிரூபிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் அனுமதி அட்டை அனுப்பும் விடயத்தை நாம் கேட்டோம். அதற்கு அவர்கள் 'அரசாங்க அதிபர்களின் இணைப்பு அலுவலகங்கள் அக்கறை எடுத்துப் பொறுப்பேற்கும் பட்சத்திலேயே தம்மால் ஒப்படைக்க முடியும்' என்கின்றனர். எனவே அரசாங்க அதிகாரிகள் இவ் விடயத்தில் உரிய அக்கறை எடுப்பது சமூகப் பொறுப்பு மட்டுமல்ல, பதவி வழி வந்த கடமையும் கூட.

யாழ்ப்பாண மாவட்டத்து, இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப்பரப்பு பரீட்சார்த்திகளது சந்தர்ப்பங்கள் நியாயமற்ற முறையில் பறிக்கப்படுவது மிகுந்த மனவேதனையைச் சகலருக்கும் தருகின்றது. கொடிய உள்நாட்டுப்போரில் சிக்கிச் சீரழியும் வடபகுதி மக்களது எதிர்கால நல்வாய்ப்புக்கள் பறிக்கப்படுவது ஓர் அடிப்படை மனித உரிமை மீறலுங்கூட.

பரீட்சை ஆணையாளர் நாயகம், திணைக்கள அதிகாரிகள், வடபகுதி அரசாங்க அதிபர்கள், அப்பிரதேச மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புப் படை அதிகாரிகள், ஏனையோர் இவ்விடயத்தில் மிகுந்த கரிசனை உடன் எடுக்க வேண்டும். தொடர்கின்ற இத்துன்பியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆவன செய்ய வேண்டும்.

— வே.த. இந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் சேதமடைந்த வீடுகள்: புனரமைக்க நடவடிக்கை எடுக்குக!

## நாடாளுமன்றில் கூட்டணி எம். பி. கோரிக்கை

கொழும்பு, டிச. 9

''வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றை புனரமைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

இப்படி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

வடபகுதி வீடமைப்புக்கென புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கப்படும் நிதி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு வழங்கப்படாமல் வேறு வழியில் பயன்படுத்தப்படுகிறது.

இது தொடர்பாக அமைச்சர் விசாரணை நடத்த வேண்டும்.

வீடமைப்புத் திட்டங்களில் வடக்கு - கிழக்கு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வடக்கு - கிழக்குக்கு 5 கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது ஆனால் 2 கோடி 50 லட்சம் ரூபாவே வழங்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## யாழ்ப்பாணத்தில் விரைவில் கணனி பயிற்சி நிலையம்

கணனி பயிற்சி நிலையம் ஒன்று பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் என்று விஞ்ஞான, தொழில்நுட்ப, மனித வளத்துறை அமைச்சர் பேர்னாட் சொய்ஸா தெரிவித்தார்.

இதே போன்ற பயிற்சி நிலையம் ஒன்று அடுத்த மாதம் வவுனியாவிலும் நிறுவப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வடமத்திய மாகாணத்தில் அலவன்ஸ்

கொழும்பு, டிச. 9

வடமத்திய மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகும் பகுதிகளாக இனம் காணப்பட்ட இடங்களில் உள்ள அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்குவதென வட மத்திய மாகாண சபை முடிவு செய்துள்ளது.

ஆபத்து அலவன்ஸ் வழங்குவதற்காக இவ்வாண்டுக்கு 4 கோடி 20 லட்சம் ரூபாவையும், அடுத்த ஆண்டுக்கு 6 கோடி 20 லட்சம் ரூபாவையும் மத்திய அரசிடம் மாகாணசபை கோரியுள்ளது.

(இ-3-150)

# அகதிகள் பிரச்சினையும் அரசியல் விளையாட்டும்

வவுனியா அகதி முகாம்களுக்கு அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த வாரம் சென்று வந்தனர்.

அமைச்சர்களோடு சென்ற எம்.பிக்களில் கூட்டணி, ஈ. பி. டி. பி., இ. தொ. கா. ஆகிய தமிழ்க்கட்சி எம்.பிக்களும் அடங்கியிருந்தனர்.

வன்னி மாவட்ட எம்.பிக்களை அழைக்கவில்லை. முதல் அழைப்பே அவர்களுக்குத்தான் விடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன விவகார நல்லிணக்க அமைச்சால் தான் தமிழ்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இன விவகார நல்லிணக்க அமைச்சு வன்னி மாவட்ட எம்.பிக்களை மட்டும் மறந்துவிட்டது. மறதியா அல்லது அலட்சியமா என்பது தெரியவில்லை.

எதுவாக இருந்தாலும் வவுனியாவில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்காக முதலில் குரல் கொடுத்து, போராட்டம் நடத்தியது புளொட் அமைப்புத்தான்.

### நோக்கம் என்ன?

அது தவிர, வவுனியா அகதி முகாம் நிலைவரங்களை பார்வையிடச் சென்றமையின் நோக்கம்தான் என்ன?

அங்குள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்காகவா, அல்லது அக்கறைப் படுவது போலக் காட்டிக் கொள்வதா?

பிரச்சினைகளைக் கண்டறிய விரும்பினால் வன்னி மாவட்ட எம்.பிக்களையும் நிச்சயம் அழைத்திருக்க வேண்டும். அவர்களுக்குத்தான், இடம்பெயர்ந்த மக்கள் வவுனியா வந்த பின்னர் ஏற்பட்ட நிலைவரம் குறித்து அதிகமான விவரங்கள் தெரிந்திருக்கும்.

அமைச்சர்களோடு சென்ற ஏனைய தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களாவது அதனைச் சுட்டிக் காட்டியிருக்கலாம்.

### பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தனர்

வவுனியாவுக்குச் சென்று இறங்கியவுடனேயே அங்கிருந்து கொழும்புப் பத்திரிகைகளுக்கு தொலைபேசியில் செய்தி கொடுத்தார்களாம் எம்.பிக்கள் சிலர்.

''நாங்கள் இங்கே வந்து அகதி முகாம்களை அமைச்சர்களோடு பார்வையிட்டுக் கொண்டிருக்கிறோம். அழகாக செய்தி போட்டு விடுங்கள்.'' என்று அன்பாகக் கூறிவிட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான நீலன் திருச்செல்வம்தான் முன்னணியில் நின்றது போலவும் செய்திகள் வெளியாகி இருந்தன.

''என்ன இது, தமிழ் எம்.பிக்கள் பலர் சென்றிருந்தும் நீலன் திருச்செல்வம்தான் முன்னணியில் நின்றதுபோல செய்தி வந்திருக்கிறதே?'' என்று மற்றொரு எம்.பியிடம் கேட்டதற்கு, ''அவர்கள் வவுனியாவில் இருந்தே செய்தி கொடுத்துவிட்டார்கள். ஏனைய கட்சி எம்.பிக்களின் பெயர்களை சொல்லாமல் விட்டுவிட்டார்கள்.'' என்று பதில் கிடைத்தது.

இத்தனைக்கும் வவுனியா அகதிகள் நிலை குறித்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிடம் முகத்துக்கு நேரே குறை சொன்னவர் இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் தான்.

''இதை அகதிகள் முகாம் என்று எங்களுக்குச் சொல்லாதீர்கள். இது தடுப்புமுகாம்!'' என்று தெரிவித்தார் யோகராஜன்.

யோகராஜன் தெரிவித்த கருத்துக்களால் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே சூடாகிவிட்டார். ''இந்த முகாமுக்குள் புலிகளே இல்லை என்று உங்களால் உத்தரவாதம் தர முடியுமா?'' என்று கேட்டிருக்கிறார்.

''என்னால் உத்தரவாதம் தரமுடியாமல் இருக்கலாம். ஆனால் இதை அகதிமுகாம் என்றுசொல்லமுடியாது. இது ஒரு தடுப்பு முகாம் என்றுதான் சொல்கிறேன்!'' என்றாராம் யோகராஜன்.

''சிறைகளில் இருப்பவர்களும் தம்மைக் குற்றவாளிகள் என்று சொல்வதில்லை. அதற்காகச் சிறைகளையெல்லாம் திறந்துவிட முடியுமா?'' என்று கேட்டாராம் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே.

அமைச்சர்களின் முகத்தை முறித்துக் கொள்வானேன், என்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடக்கி வாசித்தார்கள்.

பிரச்சினைப்பட்டது யோகராஜன்எம்.பி. பத்திரிகைகள் மூலம் பெயரெடுத்தது வேறு யாரோ! இதுதான் அரசியல். சாதாரண பொதுமக்களுக்கு இதெல்லாம் புரியுமா என்ன?

வவுனியா அகதிகள் விடயமாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமும் அரசியல் விளம்பரம் தேடும் முயற்சியாகவே முடிந்து போனது.

ஒரு மணி நேர விவாதம் கேட்டிருந்தது கூட்டணி, ஆனால் அரைமணி நேரம் தான் ஒதுக்கப்பட்டது. கூட்டணியினர் மீண்டும் வலியுறுத்தி கேட்காமல் இருந்துவிட்டதால் தான் ஒரு மணி நேரம் அரைமணி நேரமாக குறைக்கப்பட்டதாம்.

ஒரு மணி நேர விவாதம் என்றால் ஏனைய தமிழ்க்கட்சி எம். பிகளும் உரையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். கூட்டணி மட்டுமே குரல் கொடுத்தது என்று உரிமை பாராட்ட முடியாது. எனவே அரைமணி நேர விவாதம் நடத்தப்பட்டமையும் கூட்டணிக்கு ஒரு வகையில் இலாபம் தான்.

விவாதத்துக்கு பதில் அளித்தவர் அமைச்சர் அஷ்ரப்.

வவுனியா அகதிகள் எதிர்நோக்குவது உணவுப் பிரச்சினையல்ல; முகாங்களில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் பிரச்சினை அகதி முகாங்கள் தடுப்பு முகாம்களாக மாறிவிட்டது தான் முக்கியமான பிரச்சினை.

அந்தப்பிரச்சினைக்கு பதில் சொல்ல வேண்டியவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர். ஆனால் அமைச்சர் அஷ்ரப்பை பதில் சொல்ல வைத்துவிட்டார்கள்.

கூட்டணியினர் அதனை ஆட்சேபித்திருக்கலாம். மூச் சேவிடவில்லை. ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் எழுந்து ''இது அமைச்சர் அஷ்ரப்புடன் தொடர்புடைய பிரச்சினையல்ல '' என்று சுட்டிக்காட்ட அவருக்கு பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படாமையால் ''நீங்கள் அமருங்கள்!'' என்றுகூறி விட்டார் அவைத்தலைவர்.

மறுநாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி- 'ஜோசப் பரராஜசிங்கம் முழக்கம்!' விவாதத்தின் பயன் அது மட்டும் தான்!

'எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம்' என்ற நிலையில் அரசியற் கட்சிகள், நெருப்பு மட்டும் பற்றிஎரிந்து கொண்டு தான் இருக்கிறது. அணைக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு செல்பவர்கள் நெருப்புக்கு முன்னால் நின்று புகைப்படம் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போய் விடுகிறார்கள். ★

நன்றி: தினமுரசு

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐ. தே. க. குறுக்கே நிற்காது

### தமிழ் - முஸ். தலைவர்களிடம் ரணில்

''இனப்பிரச்சினைக்கு சுமுகமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஐ. தே. க. தடையாக இருக்கப் போவதில்லை. பூரண ஒத்துழைப்பு வழங்கும்.''

இப்படி ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தமிழ் — முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுடன் நடந்த பேச்சுக்களின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐ. தே. க. பிரதிநிதிகளுக்கும், தமிழ்க் கட்சி பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தமிழ் — முஸ்லிம் கட்சிகளின் சார்பில் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், செயலாளர் இரா. சம்பந்தன், டாக்டர் நீலன் திருச்செல்வம், புளொட் தலைவர் த. சித்தார்த்தன், பாஸ்கரன், ஈ. பி. டி. பி. எம்.பியான எஸ். சிவதாசன், இ. தொ. காங்கிரஸ் எம். பியான பி. பி. தேவராஜ், முஸ்லிம் காங்கிரஸ் எம். பி ரவூப் ஹக்கீம், சுஹைர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இ-3)

## உரத்தை எதிர்பார்த்து

# உருளைக்கிழங்கு நடுகை தாமதம்!

வலிகாமம் தெற்கு, டிச. 9

கமநல சேவை நிலையங்களூடாக விதை உருளைக் கிழங்கைப் பெற்றுக்கொண்ட தோட்டச் செய்கையாளர்கள் பலர் உருளைக்கிழங்கு நடுகையை தாமதப்படுத்தி வருகின்றனர்.

கமநல சேவை நிலையங்கள் உருளைக்கிழங்கு செய்கைக்கு வேண்டிய உரத்தினை பெற்று தராதவிடத்து உருளைக்கிழங்கு செய்கை போதிய பலனளிக்கமாட்டாது எனக்கருதியே தாங்கள் நடுகையை தாமதித்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளையில்—

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் விதை உருளைக்கிழங்கிற்கு விண்ணப்பித்தவர்களுக்கு முதல் கட்டமாக குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உடுவில் கமநல சேவை நிலையத்தினூடாக விதை கிழங்கு வழங்கப்பட்டு வருகின்றது.

ஒருவருக்கு இரண்டு பெட்டிகள் என்ற வகையில் 325 விவசாயிகளுக்கு இதுவரையில் 650 பெட்டி விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-152)

## சனசமூக நிலையங்களுக்கு நான்கு லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் உ. பாஸ்கரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து தீவுப் பகுதியிலுள்ள 20 சனசமூக நிலையங்களுக்கும் 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்நிதியிலிருந்து ஒவ்வொரு சனசமூக நிலையத்திற்கும் 20 ஆயிரம் ரூபா கிடைக்கவிருக்கிறது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் — காரைநகர் களபூமி சனசமூக நிலையம், காரைநகர் இலகடி சிவகௌரி சனசமூகநிலையம், காரைநகர் ஸ்ரீ சிதம்பரரேஸ்வரா சனசமூக நிலையம், காரைநகர் சடையாளி கலைவாணி சனசமூக நிலையம், நாரந்தனை தெற்கு அண்ணா சனசமூக நிலையம், தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலையம், பருத்தியடைப்பு அண்ணா சனசமூக நிலையம், எழுவைதீவு மணிவாசகர் சனசமூக நிலையம், அனலைதீவு வடக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கும்—

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் — திருவள்ளுவர் சனசமூக நிலையம், ஐயனார் சனசமூக நிலையம், புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையம், நயினாதீவு கணேசா தெற்கு சனசமூக நிலையம், நயினாதீவு மத்தி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கும்—

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில்— ஐக்கிய தீபம் சனசமூக நிலையம், நெடுந்தீவு மேற்கு சனசமூக நிலையம், வளர்மதி சனசமூக நிலையம், சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம், சென். ஜோன் மத்தி சனசமூக நிலையம், சென் அன்ரனீஸ் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கும்— இந்த நிதி கிடைக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### நூலாலயம்

பெரியோர், இளைஞர், யுவதிகள், சிறுவர்களுக்கான பயன் தரும் புத்தகங்களை தெரிவு செய்து வாசித்துமகிழ 'லிங்லெண்டிங் லைபிரறி,' 41, தபாலக வீதி, சாவகச்சேரி. Ling Lending Library. (43650)

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்களை, சஞ்சிகைகளை, பத்திரிகைகளை வாங்கவும், விற்கவும் பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்யவும் ஜோஸ்யர், 308A, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம். (9009)

### அக்கரைச் சீமையில்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது. இங்கிலாந்து சென்ற இலங்கையரது சுவையான கதை. துன்பங்களை மறந்து வாசிக்கலாம். கனவு போலிருக்கும். ரூபா 25. பூபாலசிங்கம் புத்தகசாலை. (43863)

### மூலிகை மரங்கள்

''இறைவன் ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மூலிகை மரங்களைப் படைத்துள்ளார்.'' கரிசலாங்கண்ணி, தவசி முருங்கை, சக்கரை வேம்பு, துளசி, முடக்கொத்தான், சிறியா நங்கை, கற்பூரவல்லி கன்றும், இலையும் விற்பனைக்குண்டு. மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேர்ப்பித்தும் பெற்றுக் கொள்ளவும். ''மில்க்வைற்'' (சி/3690)

### வீடு தேவை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு சமீபமாக சகல வசதியுடன் கூடிய வீடு தேவை. தொடர்பு: மே/பா இல. 563, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (44017)

### விற்பனைக்குண்டு

3 Horse Power உடைய ஐஸ்கிறீம் கொம்பரேசர் உடன் சேர்ந்த பாத் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 564, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (44023)

### தவறிவிட்டது

அல்பிரட் றோபேட் என்பவரின் 480262790 V இலக்க தேசிய அடையாள அட்டை ஸ்ரான்லி வீதிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து செபஸ்ரியாம்பிள்ளை கலினா, இல. 44, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (44024)

## மக்கள் வங்கி கடன் வழங்க பின்னடிப்பாம்

கொழும்பு, டிச. 9

யாழ். மாவட்டத்திற்குபஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு தனியாருக்கு கடன் வழங்க மக்கள் வங்கி பின்நிற்கிறது.

கொழும்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மக்களின் போக்குவரத்துச் சேவைக்காக 20 பஸ்களை தனியார் கொள்வனவு செய்ய வசதியாக மக்கள் வங்கியில் கடனைப் பெற்றுக்கொடுக்க வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை முயற்சி எடுத்து வந்தது. (இ-3-150)

# மன்னாரில் கைதானோரை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்க!

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை

மன்னாரில் கைது செய்யப்படும் சந்தேக நபர்களை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்குப் பதிலாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய ஏற்பாடுசெய்யுமாறு இராணுவத்தினர் நீதி அமைச்சிடம் கோரியுள்ளனர்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் தலைமையில் கொழும்பில் நடந்த மாநாடு ஒன்றிலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வவுனியாவுக்கு சந்தேக நபர்களை அழைத்துச் செல்வதில் போக்குவரத்துக் கஷ்டம் இருப்பதால் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் செய்ய வசதியாக நியாயாதிக்கம் வழங்க வேண்டும் என்று இராணுவத்தினர் கோரி உள்ளனர்.

வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அக்கூட்டத்தில் கலந்து கொண்ட நீதியமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3-150)

MODERN EDUCATION CENTRE
NELLIADY, KARAVEDDY.

A/L வகுப்பிற்கான பகல் நேர கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன.

| | |
|---|---|
| கணக்கியல்:- | திரு. பவான் |
| வர்த்தகம்:- | திரு. முகுந்தன் |
| பொருளியல்:. | திரு. ஸ்ரீரங்கநாதன். |
| தமிழ்;- | திரு. நடராஜா. |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | திரு. ஜோதீஸ்வரன். |
| அளவையியல்:- | திரு. நவம். |

A/L98 கலை, வர்த்தக புதிய பிரிவுகளும் ஆரம்பமாகி விட்டன.

(சி- 3685)

## வாழ்த்துகின்றோம்

யா/சந்திரமௌலீச வித்தியாசாலை
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

1995 க. பொ. த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த பின்வரும் மாணவர்களை வாழ்த்துகிறோம்.


| | | | | |
|---|---|---|---|---|
| (1) | கெங்காதரன் மயூரன் | 2D | 4C | |
| (2) | ஐயாத்துரை கிருஷ்ணமூர்த்தி | 1D | 5C | |
| (3) | பேரின்பராசா சிறீகாந்தன் | 1D | 4C | 2S |
| (4) | மேனகா முத்துக்குமாரசாமி | 1D | 3C | 2S |
| (5) | பத்மநாதன் சாந்தரூபன் | | 3C | 3S |

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(44011)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 08 — 1976

மறைவு: 09 — 11 — 1996

### செல்வி சுந்தராம்பாள் இரகுநாதன்

வீச மறந்த தென்றலே – நீ
வேலை வங்கி மூலம் வேலைக்கு போய்
பேச மறந்த தேனம்மா?
மாசறு பொன் னென்று
மானிலத்தோர் போற்றுகையில்
பாசமலர் நீ மணமிழந்து போனதுமேன்?
பல்கலையில் ''முகாமை'' பாங்குடன் கற்குமுன்
சொல்லாமல் போனதுமேன்
சுந்தரா சொல்லம்மா?

பிரிவால் துயருறும்:
நா. இரகுநாதனும், குடும்பத்தினரும்.

''சாயிபானு'',
சம்பியன் லேன்,
கொக்குவில்.

(43974)

# யாழ்ப்பாணத்தில் விரைவில் 'ஒசுசலா'

யாழ்ப்பாணத்தில் ''ஒசுசலா'' மருந்து விற்பனை நிலையம் ஒன்று இம்மாத இறுதிக்குள் இயங்க விருக்கிறது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் கொழும்பில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

''ஒசுசலா'' நிலையத்தை அமைப்பதற்கான கட்டடத்தை பெற்றுத் தருவதாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் அக் கூட்டத்தில் உறுதியளித்தார்.

யாழ். குடாநாட்டில் 89 தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன.

கொழும்பைவிட பல மடங்கு கூடுதலாக யாழ்ப்பாணத்தில் மருந்து விற்கப்படுவதாக இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# புலிகளின் தாக்குதல்...

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மின்சாரம் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டதை அடுத்தே மீண்டும் மின்சாரம் கொண்டுவர முடிந்தது. வாக்குறுதி மீறப்பட்டால் புலிகள் மீண்டும் மின்மாற்றிகளைத் தகர்த்து விடுவர்.

'மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு நாம் தடையாக இருக்க மாட்டோம். ஆனால் அபிவிருத்திப் பணிகள் நமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் நடைபெற வேண்டும்.' என்பதே புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் புலிகள் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்புக்களில் இடமளிக்க வேண்டு என்பதுதான் அந்த உத்தரவு.

### சிபாரிசுப் பட்டியல்

சமீபத்தில் சமுர்த்தி வேலை வாய்ப்புக்கு தமிழ்க் கட்சியொன்றால் சிபாரிசு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தால் சிபாரிசு செய்யப்பட்டவர்களது பெயர்களும் இருந்தன.

வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட பட்டியலில் புலிகளால் சிபாரிசு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பல விடுபட்டிருந்தனவாம். அதனால் அச்சமடைந்த குறிப்பிட்ட தமிழ்க் கட்சியினர் சமுர்த்தி வேலைவாய்ப்பில் தமக்கு தரப்பட்ட கோட்டா போதாது என்று சமுர்த்தி அமைச்சிடம் புகார் செய்துள்ளனர்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும் புலிகள் இயக்கத்தினரின் உத்தரவுகள் செல்லுபடியாகின்றன.

மட்டக்களப்பு நகரிலும், திருமலை நகரிலும் புலிகள் இயக்கத்தினர் நடமாடுகின்றனர். படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்களை தமது பகுதிக்கு வருமாறு அழைத்து நிதி திரட்டலிலும் புலிகள் இயக்கத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசியல் நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க படையினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளும் தீவிரமாகி வருகின்றன. கிழக்கில் தமது பலம் மேலோங்கி இருக்கிறது என்பதைக் காட்ட படையினரும் விமானக் குண்டு வீச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

### புதிய உறுப்பினர்கள்

ஆனால் புலிகளோ படையினரின் நடவடிக்கைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் அடிக்கடி நடைபெறும் பகுதிகளில் இருந்து இளைஞர்களும், யுவதிகளும் புலிகள் இயக்கத்தில் புதிதாகச் சேர்ந்துள்ளனர். புதிய உறுப்பினர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுபோர்க்கோலம் பூண்டு நிற்கின்றனர்.

கிழக்கில் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் அரசியல், இராணுவத் தந்திரம் அரசாங்கத்திற்கு பாதகமாகவே செல்லத்தக்க நிலை தான் ஏற்பட்டு வருகிறது.

வடக்கில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை கண்டித்து மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களில் மாணவர்களால் போராட்டங்கள் நடத்தப்பட்டன. மாணவர் ஒன்றியம் என்னும் பெயரில் நடைபெற்ற போராட்டத்தின் பின்னணியில் புலிகள் இயக்கத்தினரே இருந்தனர்.

பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் வடக்கு — கிழக்கு ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதன் நோக்கமும், மாணவர்களிடம் எழுச்சியை ஏற்படுத்தி உள்வாங்கிக் கொண்டு இயக்க அணிகளை பலப்படுத்துவதும் கிழக்கில் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறையின் நோக்கமாக இருக்கிறது.

### போட்டி

இதே வேளை கிழக்கில் வெற்றிகரமான தாக்குதல்களை அதிகளவில் நடத்துவது யார் என்ற போட்டி புலிகளின் அணிகளுக்குள் ஏற்பட்டுள்ளது. திருமலை பிராந்திய அணியும், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அணியும் போட்டி போடுகின்றன.

மட்டக்களப்பு நகரைவிட திருமலை நகருக்குள் படையினரின் கட்டுப்பாட்டுக்கு சவால் விடுவதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது.

திருமலை நகருக்குள் ஒரு தற்கொலைத் தாக்குதல் தோல்வியில் முடிந்துள்ளது. அதனால் மறுதாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிடலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

வடக்கில் வவனியாவிலும், கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நகர்களில் திருமலையிலும் தான் புலிகளின் சிவில் நிர்வாக சீர்குலைப்பு நடவடிக்கைகள் அதிகமாக இருக்கும் என்று தெரியவருகிறது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150)

STUDY CICRLE PLUS

ஆண்டு 1 முதல் ஆண்டு 11 வரை

மீண்டும் ஆரம்பம்:
13 - 12 - 96 (வெள்ளி)
காலை 7.30 மணி

தொடர்பு:
தி. சேகர்
(கொற்றாவத்தை)

(சி/3694)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பல்கலைக்கழக கல்வி முறை

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதிக் கல்வி, உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா வலியுறுத்தி உள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உகந்த, உரிய மனித வளம் தேவை. அத்தகைய மனித வளத்தைப் பெருக்குவதற்கு பல்கலைக் கழகங்களுக்கு அதிக எண்ணிக்கையான மாணவர்களை அனுமதிப்பது அவசியம் என்று அவர் நாடாளுமன்றத்தில் சொன்னார்.

பல்கலைக் கழகங்களுக்கு அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துடனேயே, புதிதாக மூன்று பல்கலைக்கழகங்கள் குறுகிய காலத்தில் திறந்து வைக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்று இலங்கையும்என்றவகையில், மலேசியா, சிங்கப்பூர், ஆர்ஜன்ரீனா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் பல்கலைக் கழக அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பதனை எடுத்துக் காட்டியுள்ளார்.

நாட்டில் இப்போது மொத்தம் பதினொரு பல்கலைக் கழகங்கள் உள்ளன.

கடந்த வருடத்தில் சுமார் 10,000 மாணவர்கள் பல்கலலக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்த வருடத்தில் அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 15, 000 ஆக உயர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவும் உயர்கல்வியை நாடும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்று சதவீதத்தை தாண்டும் என்று சொல்வதற்கில்லை.

எப்படியோ, நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் விதத்தில் உயர்கல்வி வசதி அமையவில்லை என்பது கவலைக்குரியதாகும். பட்டதாரிகளை உருவாக்கும் "ஆலைகள்" என்ற அளவிலேயே அவற்றின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அபிவிருத்திப் பணிகளில் பங்குபற்றக் கூடிய பிரசைகளை உருவாக்கும் தன்மை மிகக் குறைவாகவே உண்டு. அதனாலேயே வேலையற்ற பட்டதாரிகள் எண்ணிக்கை வருடாந்தம் பெருகி வருகிறது. இது பெரும் சமூகப் பிரச்சினையாகி, அரசியல் நெருக்கடிகளைத் தரவல்ல விவகாரமாகும் ஆபத்தும் உண்டு.

இடைநிலைக் கல்வியில் உள்ள குறைபாடு, உயர் கல்விக்கும் தொற்று வியாதியாகப் பீடித்திருக்கிறது. இடைநிலைக் கல்வியில் ஒரு மாணவன் எது எதை எல்லாமோ படித்துவிட்டு, தனது கல்விக்குத் தொடர்பில்லாத தொழிலைச் செய்வது சர்வசாதாரணம். அது போன்ற ஒரு நிலையே பல்கலைக்கழகங்கள் உற்பத்தி செய்யும் பட்டதாரிகளுக்குமாகிவிட்டது.

ஆகையால், பல்கலைக் கழகங்களின், எண்ணிக்கையையும், பல்கலைக்கழகக் கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதோடு நிற்காமல், நாட்டு அபிவிருத்திக்கு உதவும் உயர்கல்வி முறையையும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

# இராணுவத்தில் புதிய பட்டாலியன்

கொழும்பு, டிசம்பர் 9

**வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட புதிய இராணுவ பட்டாலியன் ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.**

இந்தப் பட்டாலியனை அமைக்க வசதியாக இராணுவ தலைமைப் பீடத்தில் மாற்றங்கள் பல செய்யப்படவிருக்கின்றன.

முல்லைத்தீவு முகாம் வீழச்சி தொடர்பாக விசாரணை செய்த இராணுவ நீதிமன்றம் சமர்ப்பித்தஅறிக்கையை அடுத்தே அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக எவரையும் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று இராணுவ அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் படைகளில் உள்ள சில அதிருப்தியாளர்கள் பதவி நீக்கம் செய்யப்படலாம்; சில பிரிகேடியர்கள் பதவி உயர்வு பெறலாம் எனத் தெரிகின்றது.

புதிய பட்டாலியன் அமைக்கப்படும்போது பொருத்தமான இடங்களில் அவர்கள் அமர்த்தப்படுவர்.

புதிதாக உருவாக்கப்படும் இராணுவ பட்டாலியன் வடக்கு - கிழக்கில் முக்கிய கேந்திர நிலைகளில் நிலை கொள்ளும் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை —

முல்லைத்தீவு இராணுவ முகாம் வீழ்ச்சி குறித்து இராணுவ நீதிமன்றம் சமர்ப்பித்த அறிக்கையை இரகசியமாகப் பேண வேண்டும் என்று இராணுவத் தளபதி றோஹான் தளுவத்த இராணுவ தளபதிகளைக் கேட்டுள்ளார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-150)

★ வடக்கில்

# பலாத்காரமாகத் தேர்தலை நடத்தினால் அழிவே வரும்!

### ஐ. தே. கவின் எம். பி. எச்சரிக்கை

"வடக்கில் பலாத்காரமாக தேர்தலை நடத்துவது அழிவைத்தான் கொண்டு வரும்."

ஐ. தே. க. பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் உள்ளூராட்சிச் சபைக்கான தேர்தலை நடத்தும் அரசின் முடிவு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கில் தேர்தல் நடத்தக் கூடியதாக தள நிலை இல்லை. தமிழ்க்கட்சிகளே அங்கு செல்ல மறுக்கும்போது நாம் எப்படி அங்கு சென்று தேர்தலில் பங்கு பற்ற முடியும்?

நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டில் வடக்கு இருப்பதாக அரசாங்கம் கூறினாலும் அங்கு முழுமையாக இராணுவக் கட்டுப்பாடு இல்லை.

94 ஆம் ஆண்டு வடக்கிலும், கிழக்கிலும் தேர்தல் நடத்தப்பட்டபோது சகல கட்சிகளையும் இராணுவத் தளபதி அழைத்து பாதுகாப்பு நிலை பற்றி ஆராய்ந்த பின்னரே தேர்தல் பற்றி

(8 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு உள்ளூராட்சித் தேர்தல்:

# நியமன பத்திரங்கள் புதன் முதல் ஏற்பு

கொழும்பு, டிச. 9

வடமாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் எதிர் வரும் புதன்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்சப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் திகதியை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(-3)

அரச ஊழியருக்கு நஷ்டஈடு:

# கோவைகளை ஒப்படைத்த 'ரேபியா' நிதியை மட்டும் வழங்கவில்லை

கொழும்பு, டிச. 9

வன்செயலால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொறுப்பை வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையிடம் ஒப்படைத்துள்ள "ரேபியா" அமைப்பு நஷ்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்கான நிதியை மட்டும் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காகத் தயார் நிலையில் இருந்த கோவைகளை "ரேபியா" அமைப்பு வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபையிடம் கையளித்திருந்தது.

"ரேபியா" நிறுவனம் புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப்பின் கீழும் —

வடமாகாண புனர்வாழ்வு அதிகாரசபை ஜனாதிபதியின் கீழும் — செயற்படுகின்றன.

இரு அமைப்புக்களும் வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ் வருவதால், ஓர் அமைச்சுப் பணிகளை மற்ற அமைச்சுக்குக் கையளிக்கும் போது நிதியையும் கையளிக்கவேண்டும் என்பதே சாதாரண நடைமுறையாகும் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-3-150)

### நாளை

**கார்த்திகை 25**
செவ்வாய்க்கிழமை
**திதி:** அமாவாசை முன்இரவு 11.12 வரை.
**நட்சத்திரம்:** அனுஷம் முற்பகல் 8.40 வரை.
அமாவாசை விரதம்
**ராகுகாலம்:** 3.19 - 4.49
**சுபநேரம்:** 10.49 - 12.19
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## றோட்டரக்ற் ஆண்டு விழா

யாழ்ப்பாணம். டிச. 9

சுன்னாகம் றோட்டரக்ற் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், புதிய நிர்வாகக்குழு பதவியேற்பும் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் நாளை பி. ப. 2-30 மணிக்கு நடைபெறும். (அ)

## இரவில் மீன் பிடிக்க தடை விதிப்பு

கொழும்பு, டிச. 9

மட்டக்களப்பு இராய்மடு, பால மீன்பாடு வாவிகளில் மாலை 6 மணிக்குப் பின்னர் மீன்பிடிக்க படையினர் தடை விதித்துள்ளனர்.

மீனவர்கள் என்ற போர்வையில் வந்து புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்பதாலேயே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## மட்டக்களப்பில் எலி வேட்டை!

கொழும்பு, டிச. 9

இராணுவத்தில் இருந்து சொல்லிக் கொள்ளாமல் தப்பி ஓடியவர்களை தேடிப் பிடிக்கும் — 'எலி வேட்டை' எனப் பெயரிடப்பட்ட படை நடவடிக்கை மட்டக்களப்பிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையில் ஏறாவூர்ப் பகுதியில், தப்பி ஓடிய 10பேர் கைது செய்யப்பட்டனர்.

கிழக்கில் படையில் இருந்து தப்பி ஓடியோரில் பெரும் பான்மையோர் முஸ்லிம்களாவர். (உ-3-150)

### ஒய்வூதியக்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

லேயே கிடைத்து வந்தன —

அதனால் அவர்கள் நத்தார், புதுவருடம், பொங்கல் பண்டிகைகளின் போது பணமில்லாமல் பெரிதும் கஷ்டப்பட்டனர் —

தபால் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் ஓரளவிலேனும் திருந்தியுள்ள நிலையிலும் இம்முறையும் எமக்கு முந்திய கதி தானா?—என்று உள்ளூராட்சி ஒய்வூதியர்கள் மிகக் கவலையுடன் கேட்கின்றனர். (அ)

# பகுதிநேர ஆசிரியருக்கு அரசு உதவக்கூடாதா?

வலயம் ஒன்றில் பணிபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுள் நானும் ஒருவள். நாம் "பகுதிநேர ஆங்கில ஆசிரியர்" என்ற பெயரில் நியமிக்கப்பட்டிருந்தாலும், முழு நேரமும் வேலை செய்யவேண்டியவர்களாக உள்ளோம். எமக்கு வாரத்துக்கு 15 பாடங்களுக்கு மட்டுமே வேதனம் வழங்கப்பட்டாலும், நாம் 30 பாடங்களுக்கு மேல் வேலை செய்யவேண்டியவர்களாக உள்ளோம். காரணம் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையிருப்பதும், நாம் 30 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பதுமே. மேலும் ஒருசில பாடசாலைகளில் ஒரே ஒரு பகுதிநேர ஆங்கில ஆசிரியரே எல்லா வகுப்புகளுக்கும் கற்பிக்கவேண்டியுள்ளது.

வாசகர் திருமுகம்

ஆசிரியர் பற்றாக்குறையினால் நாம் வகுப்பாசிரியர் கடமை, ஆங்கில தினப் போட்டிக்கான பயிற்சிகளை அளித்தல் போன்ற இன்னோரன்ன சேவைகளையும் செய்கின்றோம். இத்தனைக்கும் நாம் பெறும் ஊதியம் பாடசாலையிலுள்ள மற்றைய ஆசிரியர்கள் பெறும் ஊதியத்தைவிட மிகமிகக் குறைவாகும். அதிலும் தவணை விடுமுறைகளில் நாம் ஒருசில நாள்களுக்கான வேதனத்தையே பெறமுடிகிறது. ஆகவே நாம் குறைந்த வேதனத்தில் நிறைந்த சேவை செய்யும் தொண்டர்களே.

ஆனால் தொண்டர்களுக்கு இருக்கும் சலுகைகள் கூட எமக்கு இல்லை. எம்மில் சிலர் நான்கு வருட சேவையை பூர்த்தி செய்துள்ள போதிலும், நிரந்தர நியமனத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. எமது நியமனத்தின் படி நாம் வேலை செய்யும் நாள்களுக்கு நாளொன்றுக்கு 80.00 ரூபா வீதமே ஊதியம் பெறமுடிகிறது. அதிலும் எமது ஊதியத்தை உரிய காலத்தில் பெற முடிவதில்லை.

தொண்டர்களாக சேவையாற்றும் நாம் நிரந்தர ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க, வகை செய்ய அரசும், அதிகாரிகளும் உதவக் கூடாதா?

"பார்வதி"

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றொரு மோசடி வழக்கில் சிசிலைத் திரும்பவும் கைது செய்ய முயற்சி!

கொழும்பு, டிச. 9

தற்போது பிணையில் விடப்பட்டிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னவை மற்றொரு மோசடி தொடர்பாக மீண்டும் கைது செய்ய சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப் பட்டுள்ளது என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

படையினருக்கு உலர் உணவு இறக்குமதி செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி ஒன்று தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்புச் சாதனங்களை சீர்குலைக்கும் கருவிகளை 93 ஆம் ஆண்டு 7 கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்ய அப்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அனுமதித்திருந்ததாகவும் —

ஆனால் பின்னர் இக் கருவிகளை 55 கோடி ரூபாவுக்குக் கொள்வனவு செய்து மோசடியில் ஈடுபட்டதாகச் சிசில் வைத்தியரத்தின மீது தற்போது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாகவும் —

அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

இந்த மோசடி தொடர்பாகவே சிசில் வைத்தியரத்னவைக் கைது செய்ய சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாக அச் செய்தி தெரிவித்தது.

(உ-3-150)

## மத்தியஸ்தம் வகிக்க இந்தியா புலிகளுக்கு நிபந்தனையாம்!

### 'சண்டே ஐலண்ட்' கூறுகிறது

கொழும்பு, டிச. 9

ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் படி செயற்படுவதாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய முடியும் என்று இந்தியத் தலைவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவரின் பிரதிநிதியான பேபி சுப்பிரமணியத்திடம் தெரிவித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''சண்டே ஐலண்ட்'' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டைப் பிரிப்பதற்கு குறைவான ஓர் அரசியல் தீர்வைக் காண வேண்டுமென்பதில் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அக்கறையில்லாமல் இருப்பது போல் தெரிகிறது என்று விடுதலைப் புலிகளை கிளிநொச்சியில் சந்தித்துத் திரும்பிய ஈ.என்.டி.எல்.எவ். பிரதிநிதி ராஜனிடம் தாங்கள் தெரிவித்துள்ளதாக இந்தியத் தலைவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

முன்னர் இரு தடவைகளில் கொழும்பு அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களை மீறியது போல் இனி நடக்கும் பேச்சுக்களின் போது மீறுவதில்லை என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாக்குறுதி தந்தால் மட்டுமே, இந்தியா இவ்விவகாரத்தில் தலையிடக் கூடிய நிலை ஏற்படும் என்றும் அந்த இந்தியத் தலைவர்கள் தெரிவித்தனராம்.

தமிழ்நாடு மற்றும் புதுடில்லியின் உதவி விடுதலைப் புலிகளுக்கு தேவையானால் விடுதலைப் புலிகள் கடும் போக்கைக் கைவிட வேண்டும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

— இவ்வாறு 'த ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்தது.

(உ-3-150)

### 140 எம். பிக்களில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் நிகழ்வு பெரிய அளவில் நாடாளுமன்றக் கட்டடத்தில் கடந்த புதன்கிழமை நடக்க ஏற்பாடாகியிருந்தது.

இரத்ததானம் செய்ய விரும்பிய உறுப்பினர்களின் உடல் நிலை, நோய் தொடர்பான நிலைமை ஆகியன முதலாம் சுற்றில் பரிசோதிக்கப் பட்டது.

கடந்த 6 வருடங்களில் வெளிநாடு செல்லாத உறுப்பினர்கள் பற்றி 2 ஆம் சுற்றில் ஆராயப்பட்டது. எண்பது வீதமான உறுப்பினர்கள் ஒரு வருடத்துக்குள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டமை தெரியவந்தது.

இரத்ததானம் செய்ய முன்வந்த 140 உறுப்பினர்களில் 4 பேர் மட்டுமே இரத்ததானம் செய்ய தகுதியுடையவர்களாகக் காணப்பட்டனர்.

இரத்ததான நிகழ்வை ஏற்பாடு செய்த முஸ்லிம் காங்கிரஸ் தேசிய பட்டியல் எம். பியான அஸித பெரேராவும் இரத்ததானம் செய்ய தகுதியானவர்களில் ஒருவராக இருந்தார்.

இரத்ததான நிகழ்வை பெரிய அளவில் ஏற்பாடு செய்து ஏமாற்றமடைந்த அவர், நாடாளுமன்றத்தில் வேலை செய்யும் ஊழியர்களைத் தேடிச் சென்றார்.

அன்று நாடாளுமன்றத்தில் முக்கிய விவாதம் நடந்ததால் அவர்களால் வரமுடியாது போயிற்று.

அங்கு காவலுக்கு நின்ற 6 பொலீஸாரை அழைத்து வந்து அவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தினார்; இரத்ததானம் செய்ய அவர்கள் தகுதியானவர்கள் என்று கூறப்பட்டதையடுத்து நிம்மதியடைந்தார்.

அவர்களையும் சேர்த்து மொத்தம் 10 பேரே அன்றைய தினம் இரத்ததானம் செய்தனர். (உ-3-150)

### வினாத்தாள்கள்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாகியுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான வினாத்தாள்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது. (உ- 3)

### வாகரை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்பாடாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அதே வேளை — மட்டக்களப்பிலிருந்து வாகரைக்கான இ.போ. பஸ் சேவையைப் படையினர் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

### பலாத்காரமாகத்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு செய்யப்பட்டது.

தற்சமயம் எம்மையோ அல்லது வேறு எந்தக் கட்சியையோ அழைத்து தேர்தல் பாதுகாப்பு குறித்து அரசு ஆராயவில்லை— என்றார்.

(உ-3-150)

## அடுத்த வருடத்தில் புதிய கல்வித்திட்டம்

கொழும்பு, டிச. 9

தேசியக் கல்வி ஆணைக்குழு வகுத்துள்ள புதிய கல்வித் திட்டம் அடுத்த வருடம் தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதற்கென கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தலைமையில் விசேட செயலணிக் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டுக்கு உகந்த புதிய கல்வித் திட்டத்தைத் தயாரிப்பது சம்பந்தமாக தேசியக் கல்வி ஆணைக்குழு கடந்த வருடம் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அதன் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள புதிய கல்வித்திட்டத்தில் ஏட்டுக்கல்வியைவிட செயல்திறன் பயிற்சிக் கல்விக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ செயல் திறன் பயிற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் ஆண்டு - 1 தொடக்கம் பல்கலைக் கழக பட்டதாரி வகுப்பு வரை புதிய பாட நெறிகள் வகுக்கப்படும்.

★ ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்கான பாடத் திட்டம் முற்றாக மாற்றப் படும்.

★ ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில் தனித் தனித் துறைக்கு உரிய பாடங்களைம் போதிக்கும் முறை மாற்றப்படும்.

— ஒரு மாணவன் பல துறைப் பாடங்களையும் தெரிவு செய்து சேர்த்துப் பயில அனுமதிக்கப்படுவார்.

— 1998 ஆம் ஆண்டில் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வரும்.

★ ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையில் தகுதி பெறுவோர், பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு நடத்தும் விசேட பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

— அந்தப் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெறுவோர் மட்டுமே பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவர்.

★ ஆண்டு ஒன்று தொடக்கம் ஆங்கிலப் பாடம் போதிக்கப்படும்.

★ ஒவ்வொரு பிரதேச சபைப் பிரிவிலும் ஒவ்வொரு சிரேஷ்ட பாடசாலை நிறுவப்படும்.

★ 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சகலருக்கும் கட்டாய கல்வி புகட்டப்படும். (அ)

### விடுதலைப் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் இலங்கை தெரிவித்தது என்றும் அவர் கூறினார்.

இலங்கை உள்விவகாரத்தில் தலையிடும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்றும் —

தற்போது இலங்கைக்கு வழங்கும் உதவிகள் சிறிய அளவிலானவையே என்றும்— அந்த அதிகாரி மேலும் சொன்னார். (உ-3-150)

## தேர்தலில் கலந்து கொள்வது....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக முடிவு எடுப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டத் தலைவர்கள் சில தினங்களுக்கு முன்னர் கூடிய போது அரசு சார்புப் போக்குடைய சில கூட்டணிப் பிரமுகர்கள் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியதாகவும் —

ஆனால் தீவிரப்போக்குடைய ஏனையோர் அதைக் கடுமையாக எதிர்த்ததாகவும் தெரியவந்தது.

தேர்தலில் நேரடியாகப் போட்டியிடாவிட்டாலும் யாழ்.மாநகர சபை போன்ற முக்கிய அமைப்புகளுக்கு கூட்டணி ஆதரவு சுயேட்சைக் குழுவையாவது நிறுத்தலாம் என்று முதலாவது சாரார் வலியுறுத்தினர். ஆனால் இரண்டாவது பிரிவினர் தேர்தலில் போட்டியிடக் கூடாது என விடாப்பிடியாக நின்றதால் இறுதியில் போட்டியிடுவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

எனினும் கூட்டணிப் பிரமுகர்கள் சிலர் தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நியமனப் பத்திரங்கள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டிருப்பதாகவும் —

இதன் காரணமாக கூட்டணியினர் இறுதி நேரத்தில் தமது முடிவில் குத்துக் கரணம் அடிக்கக் கூடும் என்ற ஊகம் கிளம்பியுள்ளதாகவும் —

கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஈ. பி. ஆர். எல். எவ்.

''யாழ்ப்பாணத்தில் தமது கட்சி போட்டியிடும் சாத்தியம் இல்லை. ஏனைய இடங்களில் போட்டியிடும் வாய்ப்புகள் உள்ளன'' — என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் [illegible] நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

### புளொட்

'புளொட்' அமைப்பும் யாழ்ப்பாண மாவட்டத்தைத் தவிர்த்து வவுனியா, மன்னார் மாவட்ட உள்ளூராட்சி அமைப்புகளுக்கு நடத்தப்படும் தேர்தலில் பங்குபற்றலாம் என்று கருதுவதாகத் தெரிகின்றது.

அதனை 'புளொட்' தலைவர் சித்தார்த்தன் உறுதிப் படுத்தினார்.

தேர்தல் நடத்துவதற்கு எதிராகத் தமது கட்சி குரல் எழுப்பி வருகின்ற போதிலும், அரசாங்கம் தேர்தலை நடத்த முனைந்தால் தேர்தலில் போட்டியிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றார் அவர்.

இந்தத் தேர்தல் குறித்தும், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்தும் சித்தார்த்தன், இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றக் கட்டடத்தில் வைத்து எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் விரிவாகப் பேசியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

### ரெலோ

வடக்கில் அரசு நடத்த உத்தேசித்துள்ள அனைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் பங்குபற்றுவதற்கு ரெலோ அமைப்பு விரும்புவதாகக் கூறப்படுகிறது.

''தேர்தலை நடத்தும் அரசின் முடிவுக்கு எதிராக நாம் நிற்பது நல்லதல்ல. நாம் சகல இடங்களிலும் போட்டியிடுவோம்.'' — என்று கூறினார் ரெலோ பிரமுகர் விநோதலிங்கம்.

### ஈ.பி.டி.பி.

தேர்தலில் பங்குபற்றுவதில் ஈ.பி.டி.பி. அமைப்பு அதிக தீவிரம் காட்டாதபோதிலும், இது தொடர்பான விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஏகோபித்த முடிவை எடுக்கவேண்டும் என்பதில் அக்கட்சி தீவிரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

வெளிநாடு சென்றிருந்த அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தேர்தல் அறிவிப்பு வெளியானதை அடுத்து, தமது விஜயத்தை இடைநடுவில் சுருக்கிக்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தார்.

வந்த கையோடு ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களோடு அவர் தொடர்பு கொண்டு பேசியதாகத் தெரிகின்றது.

தமிழ்க் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்த அவர் முயல்வதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்றுக் காலை 'புளொட்' தலைவர் சித்தார்த்தனுடனும், ஈரோஸ் பிரமுகர் சங்கர் ராஜியுடனும் அவர் பேச்சு நடத்தவிருந்தார்.

### ஜனாதிபதியை இன்று சந்திப்பர்

டக்ளஸ் தேவானந்தாவும், சித்தார்த்தனும் இன்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுநடத்தவிருக்கின்றனர்.

அப்போது தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் அவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவர் என்றும்—

இச்சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் தமிழ்க்கட்சிகள் ஐந்தும் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ தேர்தலில் பங்குபற்றுவது குறித்து முடிவு எடுக்கும் என்றும்—

கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

இத்தேர்தல்களில் தமிழ்க் கட்சிகளை போட்டியிடவைப்பதற்கான முயற்சியில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஈடுபட்டிருப்பதாக அதன் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜயரத்தன தெரிவித்தார். (உ-3-150)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org